20 OCT 1990

நக்கீரரின்

திருமுருகாற்றுப்படை

பழமுதிர் சோலை பதிகம்

"நக்ஷத்திர மாலை"

1/56

நக்கீரரின்

திருமுருகாற்றுப்படை

பழமுதிர் சோலை பதிகம்

" நக்ஷத்திர மாலை "

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல் நாடோறும் சாற்றினுப் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்.

அடியேனுரை :

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை என்னும் நூல். முருகன் பெருமையை எடுத்துக்கூறி, மக்கள் உய்வதற்குண்டான வழியைத் தெரிவிக்கின்றது திருமுருகாற்றுப்படை முருகன் ஆறு படை வீடுகளையும் கொண்டது. அடியேன் ஒருசமயம், இந்நூல் பூராவும் 317 அடிகளையும் சிறியோருக்குப் புரிந்தவாறு, பதவுரை. பொழிப்புரைகளையும் எழுதி, அச்சிட்டுப் புத்தக உருவில் இலவசமாக திருச்செந்தூரில் வைத்து பக்தர்களுக்கு வழங்க எண்ணி முயற்சி செய்துகொண்டிருந்தேன். அவ்வமயம். சில குறுக்கீடுகள் ஏற்பட்டு முயற்சி தடைபட்டு விட்டது.

திருமுருகாற்றுப்படை முழுவதும் மனனம் செய்ய இயலாதவர்கள் பழமுதிர்சோலையில் வரும் 253-280 ஆகிய வரிகளையுமாவது பாராயணம் செய்து தினமும் பூஜையில் சொல்லலாம். என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அந்த 28 வரிகளைத்தான் "நக்ஷத்திர மாலை" என்று கூறுவார்கள். ஆகவே. இப்பொழுது அந்த 28 வரிகளுக்கு மட்டும் சுருக்கமாக பதவுரை பொழிப்புரை எழுதியுள்ளேன். அன்பர்கள் படித்து இந்த 28 வரிகளை தினமும் பாராயணம் செய்வார்களாக!

32 அம்பலவாணபுரம் தெரு
விக்கிரமசிங்கபுரம்-627 425 } **T. முத்துகிருஷ்ணன்**

கதைச்சுருக்கம்:

நக்கீரர், மதுரை கடைச்சங்க காலத்துத் தலைமைப்புலவர், சொக்கநாதர் அருளால் தருமிக்கு கிடைத்த பாடலை:

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியந்
செறி யெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே''

மதுரை பாண்டிய மன்னனிடம் பாடிப் பரிசைப் பெற்றுச் செல்லும் சமயத்தில் நக்கீரர் குறுக்கிட்டு, செய்யுட் பொருட் குற்றம் உடையது என்று கூறி தருமிக்குப்பரிசு கிடைக்காமல் செய்துவிட்டார். இறைவனே நேரில் வந்து கேட்டும், நெற்றிக்கண்ணைத் தோன்றச்செய்தும் நக்கீரர், அவர் வணங்கும் சிவபெருமானை நேரில் கண்டும் குற்றம், குற்றமே' என்று உரைத்து விட்டார், பின் இறைவன் கோபத்துக்கு ஆளாகி, பெருநோய் ஏற்பட்டு பொற்றாமரை தடாகத்தில் வீழ்ந்து, உய்யவழி கேட்டு, சிவபெருமான் கயிலை வந்து சேருப்படிச்சொல்லி, அருளினர்.

அவ்வாறு நக்கீரர் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, ஓரிடத்தில் சிவபூஜையில் பிழைபட்டோர் ஆயிரமவரை வெட்டிக்கொன்றுவிட நினைத்த ஒரு பூதத்திடம் அகப்பட்டுக் கொண்டார். அதாவது ஒரு தடாகத்தின் கரையில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தின் இலை கீழே விழுந்தால் தரையில் விழுந்த பகுதி பறவையாகவும் நீரில் விழுந்தால் மீனாகவும் மாறும். அப்படி விழுந்த ஒரு இலை பாதி தரையிலும் பாதி நீரிலும் விழ அது பறவையும் மீனாகவும் மாறி ஒன்றை ஒன்று பற்றி இழுக்க இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற நக்கீரர் சிந்தை அதன்பால் செலுத்தலுற்றார்.

இவ்வாறு சிவபூஜையில் தவறிய 999 பேர்களை பூதம் குகையில் அடைத்து வைத்திருந்தது. இவரையும் சேர்த்து 1000 ஆக, மற்றவர்கள் 'இதுகாறும் நாங்கள் பயமின்றியும் நல்ல உணவு உட்கொண்டும் இருந்தோம். இப்பொழுது நீர் வரப்போய் 1000 ஆகிவிட்டதால் உம்முடன் எல்லோரும் இன்று இறக்கவேண்டும்'' என்று வருந்த, நக்கீரர் முருகனை நினைந்து, மனமுருகி, நம்மை இறைவனிடத்து ஆற்றுப்படுத்த, திருமுருகாற்றுப்படை பாடியருளினர் முருகன் தோன்றி, பூதத்தை வீழ்த்தி, நக்கீரர் முதலானோர்களை சிறை மீட்டினர் இந்நூற்பயன் ஆன்மகோடிகளை இறைவன் பால் ஆற்றுப்படுத்தி, அவர்களுக்கு என்றும் அழியாப்பேரின்ப வாழ்க்கை தருவதாகும்.

நக்கீரர் முதன் முதலாக திருப்பரங்குன்றம் வீட்டைப் பற்றி "உலகம் உவப்பவலன் ஏர்புதிரிதரு என்று தொடங்கிய 77 அடிகளும், பின் திருச்செந்தூர் படைவீடு பற்றி 48 அடிகளும், 3வது வீடு திருவாவினன்குடி பற்றி 51 அடிகளும், திருவேரகம் பற்றி 13 அடிகளும், குன்றுதோருடல் பற்றி 28 அடிகளும், பழமுதிர் சோலை பற்றி 100 அடிகளும் பாடியுள்ளார். ஆக மொத்தம் 317 அடிகள்.

அடியேன் பழமுதிர்சோலையில் உள்ள 28 அடிகள் மட்டும் இங்கு பக்தர்கள் கவனத்துக் கொண்டு வருகிறேன் இந்த 28 அடிகளில் முருகனுடைய 27 பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. இதை நக்ஷத்திரமாலை என்று கூறுவர். இப்பெயர்கள் வடமொழி அர்ச்சனையில் பொருத்தமான பெயர்களால் அமைந்துள்ளன.

செய்யுள்: 253-280 அடிகள்.

பழமுதிர் சோலை 6வது படைவீடு

நெடும்பெரும் சியமத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால் வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றிவெல் போர்க்கொற்றவை சிறுவ!
இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்கு வில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை
மங்கையர்-கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கை சால்பெரும் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர் புகழ் நன்மொழிப்புலவர் ஏறே!
அரும் பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டு அமர் கடந்த நின்வென்றுஆடு அகலத்து
பரிசிலர் தாங்கும் உருகெழுநெடு வேள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந!* குரிசிலும்! எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின் அடிஉள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்.'

பத உரை

நெடும் பெரும் சியமத்து:= ஓங்கி உயர்ந்த பெரிய மலைச்சாரலிலே, இது சிவபெருமான் எழுந்தருளிய இமயமலையாகும்.

'நீலப்பைஞ்சுனை' = நீலநிறம் வாய்ந்த பசுமையான சுனையில், இது சரவணப் பொய்கையாகும்.

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப = பஞ்சபூதத்தலைவரில் ஒருவரான அக்கினி கடவுள் கையில் வாங்கிக்கொள்ள

'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ' = ஆறுமுனிவர்கள் பத்தினிகளால் பெற்று எடுக்கப்பட்ட செல்வனே.

'ஆல்கெழு கடவுள் புதல்வ' = ஜனகாதி முனிவர் நால்வருக்கு கல்லாலின் மரத்தின் கீழ் அமர்ந்து முனிவர்கள் ஐயங்களைச் சொல்லாமல் சொல்லியருளிய சிவபெருமானின் மகனே

'மால்வரை மலைமகள் மகனே' = பெரிய காடுகள் கொண்ட மலை அரசனான பர்வத ராஜனின் மகள் பார்வதி தேவியின் புதல்வனே.

மாற்றோர் கூற்றே' = பகைவர்களுக்கு எமன் போன்றவனே.

'வெற்றிவெல் போர்க்கொற்றவை சிறுவ' = இங்கு கொற்றவை என்பது துர்க்கையை குறிக்கின்றது துர்க்கையும் சிவபெருமானின் சக்திகளில் ஒருவள். அவள் தன்னை வழிபடுவர்களுக்கு வெற்றியும் தானும் போர் செய்து ஜயித்தவள் என்றும் குறிக்கும் மகிடாசூரனை வென்றவள். அப்பேர்ப்பட்ட துர்க்கா தேவியின் மகனே.

'இழையணி சிறப்பின் பழையோள் குழவி' = இங்கு பழையோள் என்பது மாரியம்மனைக் குறிக்கும் அவளும் சிவபெருமானின் சக்தியாவாள். ஆபரணங்கள் தரித்த மாரியம்மனின் புதல்வனே.

'வானோர் வணங்குவில் தானைத்தலைவ' = தேவர்கள் வணங்குகின்ற வில்லினால் போர் செய்கின்றவர்களுக்குத் தலைவனே.

'மாலை மார்ப' = மார்பில் மாலைகள் அணிந்தவனே

'நூலறிபுலவ' = வேதங்களினால் போற்றப் பட்டவரே.

'செருவில் ஒருவ' = போர் செய்வதில் நிகரில்லாதவரே.

'பொருவிறல் மள்ள' — போர் செய்யும் திறமை வாய்ந்தவர், வீரம் உள்ளவரே.

'அந்தணர் வெறுக்கை'— அந்தணர்களுக்கு அறவோர்களுக்கு பிரியமானவனே.

'அறிந்தோர் சொல்மலை'— உன்னை அறிந்தவர்கள் கூறும் புகழ்ச்சி சொற்கள் மலை போல் குவிந்துள்ளன.

'மங்கையர் கணவ'— வள்ளி தெய்வானை ஆகியோரின் கணவரே, 'மைந்தர் ஏறே'— ஆண் சிங்கமே.

'வேல்கெழு தடக்கை'— ஞான சக்தியான வேலைக் கையில் பிடித்தவனே.

'சால்பெரும் செல்வ'— மகிமை வாய்ந்த மிகப்பெரியவனே

'குன்றம் கொன்ற'— கிரௌஞ்ச கிரியை இருகூறாகப் பிளந்தவனே அசுரன் தன மாயையினால் மலையாகக் கிடந்தான மலையை பிளந்து அசுரனைக் கொன்றான்.

குன்றாக் கொற்றத்து'— குன்றாத வெற்றியை உடையவரே.

வீண்பெரு நெடுவரைக்குறிஞ்சிக் கிழவ' ஆகாய மேவிய மலைகளை யுடைய குறிஞ்சி நாட்டிற்குத் தலைவனே.

'பலர்புகழ் நன்மொழிப்புலவர் ஏறே'— புலவர்களும் மற்றும் பலரும் நன்கு புகழ்கின்ற புலவர்களுக்கு சிங்கம் போன்றவனே, அகஸ்திய முனிவருக்குத் தமிழ் உரைத்தவன்.

'அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக'— பெறுவதற்கு அருமையான மோக்ஷத்தை அளிக்கும் வல்லமை பொருந்திய பெயர்பெற்ற முருகக் கடவுளே.

'நசையினர் ஆர்த்தும் இசை பேர் ஆள'— வீட்டை விருப்பி பிரார்த்தித்து வந்தவர்களுக்கு அவ்வாறே மோக்ஷத்தை அளிக்கும் பெரும் புகழ் உடையனே.

'அலந்தோர்க்கு அளிக்கும் பொலம் புண்சேய்'— கஷ்டப்பட்டு வந்து பிரார்த்தனை செய்பவர்களுக்கு அருள்பாலிக்கும் பொன்னாபரணங்களை அணிந்த குமரனே

'மண்டு அமர் கடந்த'— போரில் வெற்றி பெற்ற, அதாவது வலிய வந்த போரை ஜெயித்த.

'நின்வென்றாடு அகலத்து'— பகைவரைக் கொன்ற உன் வெற்றி மார்பிலே,

'பரிசிலர்'— உன்னிடம் வந்து வணங்கி யாசிப்பவர்களை தாங்கும் தாங்குகின்ற.

'உருகெழு நெடுவேள்'— அழகு பொருந்திய உயர்ந்த மேனியை உடையவனே.

'பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்' — உயர்ந்தோர் வணங்கும் பெரிய தன்மையுடைய கடவுளே ஞானத்திலும் சீலத்திலும் சிறந்த முனிவர்கள் துதிக்கின்ற; தேவர்களாலும் துதிக்கப்பகின்றவன் என்பதாகும்.

'சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி' — சூரனை, அவன் குலத்தைப் பூண்டோடு அழித்த. சக்திபொருந்திய பெருமையோடுகூடிய வலிமையுடையவனே.

'போர் மிகு பொருந' — போர் செய்வதில் திறமையுள்ளவரே.
'குறிசில்' — பெருமையில் சிறந்தவனே

'எனப் பலயான் அறி அளவையின்' — எனப்பலவாறு நான் அறிந்த அளவில்

'ஆறுது' — நீங்காது

'ஏத்தி' — துதித்து

'நின் அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்' — உன் பெருமைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கூறி அதை விளங்கிக் கொள்ளுதலும் உலகில் உள்ளவர்களுக்கு அருமையாகும் அதனாலே

'நின் திருவடி உள்ளி வந்தனன்' — உன் திருவடியை நம்பி வந்தடைந்தேன.

'நின்னொடு' — உன்னோடு

'புரையினர்' — ஒப்பானவர்

'இல்லாப் புலமையோய்' — ஒப்பானவர் ஒருவரும் இல்லை.

'ஞானப்பிழம்பே நீ'

பொழிப்புரை:

சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து ஏற்பட்ட ஆறு தீப்பொறிகளிலிருந்து ஆறுமுகக் கடவுள் தோன்றினான். கல்லாலின் கீழ் இருந்து நால்வருக்குச் சொல்லாமல சொல்லி, போதித்தவருடைய குமரனே; பார்வதிதேவியின் மகனே; பகைவர்களுக்கு எமன் போன்றவனே, தன்னை வழிபடுபவர்களுக்கு வெற்றியைத் தருபவனே; துர்க்காதேவி. மாரியம்மன் புதல்வனே. தேவர்கள் வணங்குகின்றவனே; விற்போர் செய்பவனே. தலைவனே, மாலைகள் அணிந்தவனே; வேதங்களால் அறியப்பட்டவன், போர்களத்தில் ஒப்பற்றவன், போர்த்திறம் வாய்ந்தவன். அந்தணான் செல்வனே! அந்தணர், அறவோர் அறிந்தவாகள் கூறும் புகழ்ச்சி

சொற்களை மலைபோலும் உள்ளவனே, வள்ளி, தெய்வானையின் நாயகனே. ஆண் சிங்கமே! உமாதேவி கொடுத்த வேலைக் கையில் பிடித்தவனே, அரக்கர்கள் தங்கள் மாயையினால் மலையாய் கிடந்த வனை மலையை இரண்டாகப் பிளந்து அசுரனை, கிரௌஞ்சனை அழித்தவனே.

கிரௌஞ்சன் மலைவடிமாகக் கிடந்து அவ்வழியே வரும் முனிவர்களுக்கு, மலைக்குள் வழி இருப்பது போல் தோன்றுவான். அவ்வழியில் செல்லும் முனிவர்களை மயக்கி, கொன்று தின்றுவிடுவான். ஒரு சமயம் அகஸ்தியர் அவ்வழியே செல்லும்போது, வழி அடைப்பட்டிருந்தது. திரும்ப நினைத்து திரும்புகையில் அந்தம் வழி காணாது மயங்குகிறார். பின்னர் தம் அறிவுக்கண்களால் 'இது அசுரன் மாயை' என்பதைப் புரிந்துகொண்டு தம கைத்தண்டினால் தகர்த்து வெளி வந்து "நீ இன்னும் கொஞ்சகாலம் இப்படி இடுக்கண் புரிந்து, பின் அறுமுகப் பெருமான் அயில் வேலால் அழியக்கடவாய்" என்று சாபம் இட்டார்.

குறையாத வெற்றியை ஆகாசத்தளவு பெற்ற உயர்ந்த குறிஞ்சி நிலக்கடவுளே! பலரும் புகழ்கின்ற நல்லிசைப் புலவர்களுக்குச் சிங்கம் போன்றவனே; அகஸ்தியருக்குத் தமிழ் போதித்தவனே. பெறுவதற்கு அருமையான பேருகிய மோக்ஷததை அளிக்கவல்லவனே, விரும்பி வந்தவர்களுக்கு. அதாவது மோக்ஷத்தை விரும்பி வந்தவர்களுக்கு அனுபவிக்கச் செய்யும் பெரிய புகழை உடையவனே; இடுக்கண் பட்டவர்களுக்கு அருள் பாலிக்கும்; பொன்னாபரணங்கள் அணிந்த குமரக்கடவுளே, நெருங்கி வந்த போரை வெற்றியுடன் செலுத்தி வென்றவனே: வெற்றியோடு பகைவரைக் கொன்ற, வீரம் விளங்கின்ற மாபிலே உன்னிடம் யாசித்து வருவோரை ஆதரிக்கும் பிரகாசம் பொருந்திய உயர்ந்த வடிவமுடையவனே, உயர்ந்த தேவர்கள் துதிக்கின்ற பெரும் புகழ் வாய்ந்த கடவுள், சூரனுடைய குலத்தை நாசமாக்கிய வலிமையினால் பெருமையுடைய பலம் பொருந்தியவனே யுத்தத்தில் தலைசிறந்தவனே' பெருமையில் சிறந்தவனே என்று பலவாறு நான் அறிந்து சொன்ன அளவிலும், நீங்காது துதித்து. உன்னை, உன் பெருமைகளை, யெல்லாம் அளவிட்டு அறிதல் பல உயிர்க்கு அரிதானதாகையால். உன் திருவடி மனதில் விரும்பி வந்தடைந்தேன். உன்னோடு ஒப்பானவர் இல்லாத மெய்ஞானப் பிழம்பே; உலகத்தவர் எத்தனை பிறவி எடுத்தாலும் உன் பெருமை அறிய முடியாதது உன் திருவடி மனதில் விருபபி வந்தடைந்தேன் உன்னோடு ஒப்பானவர் இல்லாத மெய்ஞானப்பிழம்பே;

தனி உரை

துதிக்கும் அடியவர்க்கு ஒருவர் இடர் நினைக்கில், அவர் குலத்தைக்களைந்தும், அடியவர்க்குத் துணையாகவும் இருப்பான் முருகன் அருணகிரியார் அலங்காரத்தில் கூறியபடி ''நாள் என் செய்யும் வினைதான் என் செய்யும் என்னை நாடி வந்த கோள் என் செய்யும் கொடுங்கூற்று என் செய்யும் குமரேசர் இருந்தாளும். சிலம்பும், சதங்கையும், தண்டையும் சண்முகமும் தோளும். கடம்பும், எனக்கு முன்னே வந்து தோன்றிடுனே''

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் கூறியபடி எவனொருவன் எனை விடாது பக்தி பண்ணிக்கொண்டு வருகிறானோ, அவனுடைய நலன்களை நான் பாதுகாத்துக் கொள்கிறேன்'

அப்பர் பெருமானை கல்லில் பூட்டி கடலில் பாய்ச்சினும் மிதந்தார் நீற்றறையில் வைத்து நீற்றியும் இன்பமாக குளிர் சாதன அறையில் இருந்தவாறு இருந்தார் — நமசிவாய மந்திர மகிமையினால்!

இமயமலைச்சாரலிலே சிவபெருமான் தர்பையால் ஆக்கம் பட்ட ஆசனத்தில் அமர்ந்தவாறு தேவர்களின் இடுக்கண்களை எண்ணியவராய், சூரபத்துமன் முதலிய அரக்கர்களை வெல்லும் பொருட்டு நம் சக்தி அவர்களை வெல்லும் என்று அருளியபடி. சூரபத்மன சிங்கமகாசூரன், யானைமுகன் பதும கோபன் ஆகிய அசுரர்கள் சிவபெருமானிடம் நிறைய வரங்களை பெற்று தேவர்களுக்கு பல கஷ்டத்தை உண்டு பண்ணினார்கள். சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து எற்பட்ட ஆறு தீப்பொறிகளிலிருந்து ஆறுமுகக் கடவுள் தோன்றினான், சிவனும் ஆறுமுகனும் ஒன்றே.

இந்த நக்ஷத்திர மாலையில் மூன்று சொற்கள் வருகின்றன நசையினர். அலந்தோர். பரிசிலர் முருகன் இந்த மூவருக்குமே அருள் புரிகின்றார் நசையினர் என்ற சொல்லுக்கு மோக்ஷத்தை அடைய விரும்புகின்றவர்கள்; இவ்வுலகின் கண் பொன் பொருளானவற்றுக்கு ஆசைப்படாதவர்கள்; துறவிகள் என்று வைத்துக் கொள்ளலாம். அல்லது நாயன்மார்கள் வரிசையில் வரும் பற்றற்றவர்கள் இறைவன் திருவடியே தஞ்சம் என்று எண்ணி இறைவனிடம் பிரார்த்திப்பவர்கள் அவர்களுக்கு அவர்கள் வேண்டியவாறு வீடு பேற்றை அளிக்கிறான். 'வேண்டத்தக்கதறிவோய் நீ வேண்டி முழுதும் தருவோய் நீ வேண்டும் அயன்

மாற்கரியோய் நீ வேண்டி என்னைப்பணி கொண்டாய் வேண்டி நீயா தருள் செய்தாய் யாதும் வேண்டினல்லால் வேண்டும் பரிசு ஒன்று ஒன்றுண்டெனில் அதுவும் உன்றன் விருப்பன்றே'' மணி வாசகர், அலந்தோர்': உலகக் காரியங்களில் உழல்வோர் இல்லறத்தார்கள். துன்பம் வந்த காலை கடவுளிடம் தங்கள் துன்பம் நீங்கவேண்டும் என்று பிரார்த்திப்பவர்கள் அவர்கள் செய்த நல்வினை, தீ வினைகளுக்கு ஏற்ப பலகஷ்டங்கள் வந்து கொண்டிருக்கும். தன்னால் வரும் கஷ்டம்; இவர்களால் ஏற்படுத்தப் படும் கஷ்டங்கள் வேறு இவர்கள் இறைனது எனக்குச்செய். எனது நோய் நீங்கட்டும். காவடி எடுக்கிறேன்', 'கேஸ்'' ஜெயிக்கட்டும் பால்குடம் எடுக்கிறேன்' என்று முருகனிடம் பேரம் பேசுபவர்கள் அவர்களுக்கும் அருள் புரிகின்றான் 'பரிசிலா': பரிசை வேண்டி 'முருகனை வழிபடுபவர்கள் எனக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டும், கலியாணம் ஆக வேண்டும். குழந்தை பிறக்க வேண்டும், என்று தன் நலத்துக்காகவே பிரார்த்தனை செய்பவர் கள் அவர்களுக்கும் முருகன் துணை புரிகின்றார். அருள் பாலிக்கின்றார் ஆகவே இந்த உலகின் உள்ள இந்த மூவகைப்பிரிவினருக்கும் முருகன் உதவி செய்கிறார்! மூன்று வகை அடியார்களையும் காக்கின்றார். நினைத்த காரியத்தை அனுகூலமாக்கும் பிரான் முருகக் கடவுள். ஆகவே தான் இக்கலியுகத்தில் கருணை வள்ள லாகிய முருகன் அவதாரம் நமக்கெல்லாம் துணை புரிகின்றது ஓம் சரவணபவ ஓம் முருகா.

அருணகிரிநாதர் அவர் கந்தரனுபூதியில் 7-வது பாடலில் மனதுக்கு உபதேசித்தபடி,

> ''கெடுவாய் மனனே கதிகேள் கரவா
> திருவாய் வடிவேள் இறைதாள் நினைவாய்
> சுடுவாய் நெடுவேதனை தூள் படவே
> விடுவாய் விடுவாய் வினையாவையுமே''

''ஏ மனமே, உன்னிடம் உள்ள பொருள்களை கரவாது யாசிப்பவர்களுக்குத் தர்மம் செய்; முருகன் தாளை என்றும் நினை; உன்வினைகள் யாவும் நீங்கும் ஆகவே முருகனிடம் தஞ்சம் புகுந்து. அவன் திருவடிகளைத்தினமும் தியானித்து. ஏழைகளுக்குக் கரவாது உதவி செய்வோம், முருகன் அருளுக்குப் பாத்திரமவோம். நம் செய்வினை நீங்கும்; பிறவியும் நீங்கும் நம்துயர் நீங்கும் ஓம் முருகா, ஓம் முருகா ஓம் முருகா. ☆

1/756

அச்சிட்டு உதவியவர் :

திரு. M. தங்கராமானுஜம் M.A. M.Ed.,
177, வைகை காலனி, அண்ணாநகர்,
மதுரை - 20.

சுயம்புலிங்க அச்சகம், சிவந்திபுரம். போன் : 289